இன்றைய வேளாண் செய்திகள்

09.01.2013 A.M

---

## டெல்டா மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

தமிழக கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு அந்தமான் கடல் அருகில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இலங்கையில் நிலை கொண்டிருந்த அந்த தாழ்வு நிலை தற்போது இந்தியப் பெருங்கடல் பகுதி மற்றும் தமிழகக் கடல் பகுதி வரை பரவியுள்ளது. இதன் காரணமாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்யலாம் என வானிலை மைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வானிலை முன்னறிவிப்பு: ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட இடங்களில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. வட தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஓரிரு இடங்களில் மழை பெய்யக் கூடும்.

## "இயற்கை விவசாயம் செய்தால் கடன் வாங்க வாய்ப்பில்லை'

இயற்கை விவசாயம் செய்தால் கடன் வாங்க வாய்ப்பில்லை என இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார் பேசினார்.

ராமநாதபுரம் ஊரக வளர்ச்சித் துறை இல்லத்தில் தேசிய நுகர்வோர் தின விழா மற்றும் தேசிய உழவர் தின விழா கிரியேட் அறக்கட்டளை சார்பில் திங்கள்கிழமை நடைபெற்றது.

அறக்கட்டளைத் தலைவர் பேராசிரியர் பி.துரைசிங்கம் தலைமை வகித்தார். நுகர்வோர் பாதுகாப்புக் குழு நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். கிரியேட் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் ஆர்.பொன்னம்பலம் வரவேற்றார்.

விழாவில் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார் பேசியது:

இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடையே தற்போது அதிகரித்து வருகிறது. பருவ கால மாறுபாடுகள் காரணமாக வறட்சியாலும், வெள்ளத்தாலும் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். கடனை திருப்பி அடைக்க முடியாமல் விவசாயிகள் தற்கொலை எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இயற்கை விவசாயம் செய்தால் கடன் வாங்க வாய்ப்பே இல்லை. ஏனெனில் பாரம்பரிய நெல் ரகங்கள் 63 வகைகள் உள்ளன. இவற்றிற்கு அதிக விலைக்கு வாங்கி ரசாயன உரங்களைப்போட வேண்டியதில்லை.

ஒருமுறை களை எடுத்தாலே போதும். வெள்ளத்தையும், வறட்சியையும் தாக்குப்பிடிக்கும் விவசாயமே இயற்கை விவசாயம்.

மாடுகளுக்கும் வைக்கோல் அதிகமாகக் கிடைக்கும். மகசூலும் அதிகமாகக் கிடைக்கும். இயற்கை விவசாயத்தில் பயிர்களை நடுவதற்கு முன்பாக அந்த நிலத்தில் ஆடு, மாடுகளை இரவு நேரங்களில் தங்க வைத்தாலே மிக அதிகமான விளைச்சல் கிடைக்கும்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வேலிக்கருவை மரங்கள் அதிகமாக வளர்ந்து நிலத்தில் இருக்கும் தண்ணீர் அனைத்தையும் உறிஞ்சி விடுகிறது. இதனால் விவசாயத்திற்குப் போதுமான தண்ணீர் இல்லாமல் போய் விடுகிறது.

எனவே மாவட்ட நிர்வாகம் வேலிக்கருவை மரங்களை முற்றிலுமாக அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் கோ.நம்மாழ்வார்.

விழாவில் பரமக்குடி நுகர்வோர் சங்கத் தலைவர் ந.சேகரன், ஏர்வாடி நுகர்வோர் பாதுகாப்புக் குழுச் செயலர் முகம்மது அபுபக்கர், ராமேசுவரம் நுகர்வோர் குழுத் தலைவர் முத்துக்குமார் ஆகியோர் உள்பட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தென்னை நார்த் தொழிற்சாலைகள் தொடங்குவோருக்கு உதவ கயிறு வாரியம் தயார்

கிராமப் புறங்களில் தென்னை நார்த் தொழிற்சாலைகள் தொடங்க மானியத்துடன் ஆலோசனையும், உதவிகளையும் செய்துதர தயாராக உள்ளதாக பொள்ளாச்சி மண்டல கயிறு வாரிய வளர்ச்சி அலுவலர் ஜி. பூபாலன் தெரிவித்தார்.

பொள்ளாச்சி கயிறு வாரிய மண்டல அலுவலகமும், மாவட்ட தொழில் மையமும் இணைந்து குடியாத்தத்தில் மகளிர் குழுக்கள், தென்னை நார் உற்பத்தியாளர்களுக்கு, தென்னை நாரிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பது குறித்து செவ்வாய்க்கிழமை நடத்திய பயிற்சிப் பட்டறைக்குத் தலைமை தாங்கி அவர் பேசியது:

கயிறு தொழில்களான தென்னை நார் உற்பத்தி, கயிறு உற்பத்தி, சுருள் கயிறு உற்பத்தி, நார்க் கழிவு கட்டிகள் உற்பத்தி, நார் கழிவு உரம் தயாரித்தல், கயிறு மதிப்பூட்டப்பட்ட தொழில்கள் தொடங்குவதற்கு மானியத்துடன் கூடிய வங்கி கடன்கள் வழங்கப்படுகின்றன.

கயிறு பொருள்களை வெளிநாடுகளில் சந்தைப்படுத்த, வெளிநாடு சென்று வர மற்றும் பொருட்காட்சியில் பங்கு பெற மானியம் வழங்கப்படுகிறது.

நார்க் கழிவுகளை இயற்கை உரமாக மாற்றும் நவீன தொழில்நுட்பங்களையும் அளிக்கத் தயாராக உள்ளோம் என்றார் பூபாலன். தொழில் மைய உதவி இயக்குநர் ஏகாம்பரம் தலைமை வகித்தார். தஞ்சாவூர் கயிறு வாரிய நிர்வாகி கே. சத்தியன் வரவேற்றார்.

குடியாத்தம் கயிறு குழும மேலாளர் ஆர். ஜெகதீசன், திருப்பத்தூர் கயிறு குழும இயக்குநர் பி. வெங்கடேஷ், பொள்ளாச்சி கயிறு வாரிய மண்டல ஆய்வாளர் எம். சுரேஷ்குமார், தொழில்நுட்ப வல்லுநர்கள் சதீஷ்பாபு, எம். மதிராஜன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

தென்னை நார் உற்பத்தியாளர்கள் சி. பூபதி, திருநாவுக்கரசு, இதரீஸ்பாஷா, பக்தவச்சலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தென்னை நாரில் தயாரிக்கப்பட்ட மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் கண்காட்சியும் அரங்கில் அமைக்கப்பட்டிருந்தது. வி. மார்கேசன் நன்றி கூறினார்.

### 18-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் இம் மாதம் 18ஆம் தேதி நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு கூட்டம் தொடங்குகிறது. கூட்டத்தில், ஆட்சியர் விஜய் பிங்ளே உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அதிகாரிகள் கலந்துகொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்க உள்ளனர்.

எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கைகள் மற்றும் குறைகள் அடங்கிய மனுக்களை இம் மாதம் 10ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதுதவிர, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் விவசாயிகள் தங்கள் மனுக்களை அளிக்கலாம்.

இம் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைதீர் கூட்டத்தில் இதற்கான பதில்கள் அளிக்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## நாமகிரிப்பேட்டையில் 1,300 மூட்டைகள் மஞ்சள் ஏலம்

ராசிபுரம் அடுத்துள்ள நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் 1,300 மூட்டைகள் மஞ்சள் விற்பனையானது. அதன் மூலம், ரூ.40 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.

ராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை சுற்றுவட்டாரப் பகுதியில் அதிக அளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மஞ்சள் இங்குள்ள 20-க்கும் மேற்பட்ட மஞ்சள் மண்டியினரால் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனையாகிறது.

மேலும், இங்கு அறுவடையாகும் மஞ்சள் செவ்வாய்க்கிழமை தோறும் நாமகிரிப்பேட்டையில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு கொண்டுவரப்பட்டு ஏலம் மூலம் விற்பனையும் செய்யப்படுகிறது.

தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் வர்த்தகர்கள் நேரிடையாக வந்து கொள்முதல் செய்கின்றனர். செவ்வாய்க்கிழமை இங்கு நடைபெற்ற ஏலத்தில் ரூ.40 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் போனது. இந்த வாரம் 1,300 மூட்டைகள் மஞ்சள் வரத்து இருந்தது.

ரூ.13ஆயிரத்தைத் தொட்ட பனங்காலி மஞ்சள்: செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏல விற்பனையில் விரலி ரகம் குறைந்தபட்சமாக ரூ.5 ஆயிரத்து 869-க்கும், அதிகபட்சமாக ரூ.9 ஆயிரத்து 339-க்கும் விலை போனது.

இதேபோல, குண்டு ரகம் குறைந்தபட்சமாக ரூ.3 ஆயிரத்து 619-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 939-க்கும் விற்பனையானது. பனங்காலி மஞ்சள் ரூ.8 ஆயிரத்து 900 முதல் அதிகபட்சமாக ரூ.13 ஆயிரத்து 888 வரை விற்பனையானது. இந்த விலை வரும் வாரங்களில் அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## தூத்தூர் மலை அடிவாரத்தில் உரக் கிடங்கு அமைக்கும் பணி தொடக்கம்

பொன்னமராவதி பேரூராட்சி சார்பில் தூத்தூர் மலை அடிவாரத்தில் உரக் கிடங்கு அமைக்கும் பணி பலத்த போலீஸ் பாதுகாப்புடன் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

பொன்னமராவதி பேரூராட்சி பகுதியில் நாள்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகள் நகரின் பல்வேறு இடங்களில் கொட்டப்பட்டு வந்தன.

இதனால் சுகாதாரக்கேடு ஏற்படுவதாகக்கூறி பொதுமக்கள் ஊருக்கு வெளியே ஒரு இடத்தில் குப்பைகளைக் கொட்ட வலியுறுத்தினர்.

அதன்படி தூத்தூர் மலை அடிவாரத்தில் குப்பைகளை கொட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.40 லட்சம் மதிப்பில் உரக்கிடங்கு அமைக்கும் திட்டத்துக்கு 2012 மார்ச் 15-ல் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறப்பட்டது.

இந்நிலையில் 3-ம் தேதி பேரூராட்சி பணியாளர்கள் அந்த இடத்தை ஜேசிபி இயந்திரம் மூலம் சமன்படுத்தும் பணியில் ஈடுபட்டபோது தூத்தூர் மற்றும் ஆலவயல் கிராம மக்கள் குப்பைகளை அங்கு கொட்டுவதால் இப்பகுதியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் எனக் கூறி ஜேசிபி இயந்திரத்தை முற்றுகையிட்டு பணியை நிறுத்தினர். கோட்டாட்சியர் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் செவ்வாய்க்கிழமை மீண்டும் பணி தொடங்கப்பட்டது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் பலத்த மழை

புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பெய்த பலத்த மழையால் வறண்டபூமி குளிர்ச்சியானது.

இடுபொருள் விலை உயர்வு, உற்பத்தி விலை குறைவு, உரியகாலத்தில் கிடைக்காத காவிரி நீர் உள்ளிட்ட பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு பயிர் சாகுபடி மேற்கொண்ட விவசாயிகளுக்கு நிகழாண்டு இயற்கைக்கு மாறாக மழைக் காலத்தில் வறட்சி, மின்தடை உள்ளிட்ட பிரச்னைகளால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இதனால், விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த அனைத்து தொழில்களும் முடங்கின. நிலத்தடி நீரும் குறைந்து வருவதால் பல பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை மாலை பலமான குளிர் காற்றும் அதோடு சுமார் ஒரு மணிநேரம் மழையும் பெய்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு மழையைக் கண்ட புதுக்கோட்டை நகர் பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சிக்குள்ளாகினர். தமிழகத்தில் நிலக்கடலைக்கு புகழ்பெற்ற ஆலங்குடி பகுதியில் மலை குறைவால் மார்கழிப் பட்ட கடலை சாகுபடியில் பின்னடைவு ஏற்பட்டது. இருப்பினும் வறட்சியிலும் விதைக்கப்பட்டு முளைத்த பயிர்களுக்கும், கடலை விதைப்புக்கும் இம்மழை பயனுள்ளதாக அமையும்.

காய்ந்த நிலம் தற்போது குளிர்ந்துள்ளதாலும், மேலும் மழை பெய்யக்கூடும் என்ற நம்பிக்கை

உள்ளதாலும் விவசாயிகள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர். இம்மழை, கனத்த இதயத்தோடு நடமாடிய விவசாயிகளின் மனதில் சற்றே புன்னகையை ஏற்படுத்தியுள்ளது.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 34.99 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 34.99 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 830 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### குமரி மாவட்டத்தில் மிதமான மழை நீடிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டாவது நாளாக பரவலாக மழை பெய்தது. இதனால் பெருஞ்சாணி அணை மூடப்பட்டு பேச்சிப்பாறை அணையிலிருந்து பாசனத்துக்கு விநாடிக்கு 231 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில் கடந்த இரண்டு நாள்களாக இரவில் பணி மூட்டமும், பகலில் லேசான மழையும் பெய்து வருகிறது.

கடந்த ஒரு வாரமாக பாசனத்துக்கு பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள் திறக்கப்பட்டன. இந்நிலையில் ஆங்காங்கே மழை பெய்து வருவதால் பாசனத்துக்கு அணைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

பெருஞ்சாணி அணையிலிருந்து வெளியேற்றப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணையில் இருந்து விநாடிக்கு 231 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. குளிர்ந்த காற்று வீசுகிறது.

குலசேகரத்தில் மிதமான மழை:  குமரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக அனைத்துப் பகுதிகளிலும் மிதமான மற்றும் மிதமான மழை பெய்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை, குலசேகரம், திற்பரப்பு, திருநந்திக்கரை, திருவட்டார், அருமனை உள்ளிட்ட பகுதிகளில் மிதமான மழை பெய்தது. இந்த மழை வாடி நிற்கும் வாழை, தென்னை, ரப்பர் மற்றும் காய்கறி உள்ளிட்ட பயிர்களுக்கு சாதகமாக அமைந்தது.

குறிப்பாக கரையோரப் பகுதிகள், மலை சார்ந்த பகுதிகளில் நடவு செய்யபட்டுள்ள மரச்சீனி, வாழை உள்ளிட்டப் பயிர்கள் கருகும் நிலையிலிருந்து ஓரளவு காப்பாற்றப்பட்டுள்ளன.

## ஜன.18-ல் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் இம் மாதம் 18-ம் தேதி நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு கூட்டம் தொடங்குகிறது. கூட்டத்தில் ஆட்சியர் விஜய் பிங்ளே உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்க உள்ளனர்.எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கைகள் மற்றும் குறைகள் அடங்கிய மனுக்களை இம் மாதம் 10-ம் தேதிக்குள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதுதவிர, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத்துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் விவசாயிகள் தங்கள் மனுக்களை அளிக்கலாம்.

இம் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைதீர் கூட்டத்தில் இதற்கான பதில் அளிக்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பல்லடம் அருகே வறட்சியால் விவசாயி தற்கொலை

பல்லடம் அருகே நாதேகவுண்டன்பாளையத்தில், வறட்சியால் நஷ்டமடைந்த விவசாயி திங்கள்கிழமை தற்கொலை செய்துகொண்டார்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகிலுள்ள நாதேகவுண்டன்பாளையம், பல்லாங்காட்டுத் தோட்டத்தைச் சேர்ந்தவர் விவசாயி சுப்பிரமணியம் (51); தனக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தில் கிணற்றுப் பாசனம் மூலம் விவசாயம் செய்து வந்தார்.

கள்ளிபாளையத்திலுள்ள வங்கிக் கிளையில் பயிர்க் கடன் பெற்று, 700 அடி முதல் 900 அடி வரை 4 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தும் போதிய தண்ணீர் இல்லாததால், வேளாண்மை செய்ய முடியாமல் சிரமப்பட்டாராம். கடும் வறட்சியால் குடும்பச் செலவுக்குகூட பணமின்றி சிரமப்பட்டு வந்தாராம்.

இந்நிலையில், வங்கியில் வாங்கிய கடனை திரும்பச் செலுத்த வலியுறுத்தி, திங்கள்கிழமை நோட்டீஸ் வந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் வேதனை அடைந்த சுப்பிரமணியம், திங்கள்கிழமை மாலை பூச்சிமருந்தை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

இதையறிந்த அவரது உறவினர்கள் சுப்பிரமணியத்தை கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு செவ்வாய்கிழமை சிகிச்சை பலனின்றி சுப்பிரமணியம் இறந்தார். பல்லடம் போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தற்கொலை செய்து கொண்ட சுப்பிரமணியத்தின் மனைவி சுமதி (41) மாற்றுத் திறனாளி ஆவார். இவர்களுக்கு ரஞ்சிதா (9) என்ற மகளும், ஜயசாரதி (7) என்ற மகனும் உள்ளனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

09.01.2013 A.M

## கோகிலாபுரத்தை சுற்றி ஏழு கிராமங்களில்கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசி

தேனி:கோகிலாபுரத்தை சுற்றி உள்ள ஏழு கிராமங்களில், கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.உத்தமபாளையம் அருகே கோகிலாபுரத்தை சேர்ந்த விவசாயி சசிகுமாருக்கு சொந்தமான 10 மாடுகள் "அடைப்பான் நோயால்" அடுத்தடுத்து இறந்தன. இதனை தொடர்ந்து இந்நோய் மேலும் பரவாமல் இருக்க, கோகிலாபுரம், ராயப்பன்பட்டி, வாய்க்கால்பட்டி, ராமசாமிநாயக்கன்பட்டி, ஆனைமலையான்பட்டி, சின்னஓவுலாபுரம், முத்துலாபுரம், உத்தமபாளையம் கிராமங்களில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் அடைப்பான்நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

கால்நடை இணை இயக்குனர் சந்திரசேகரன் கூறியதாவது: அடைப்பான் நோய் எளிதில் பரவக்கூடியது. எனவே இந்நோய் பாதித்த கிராமத்திலும், சுற்றிலும், 8 கி.மீ., தொலைவிற்குள் உள்ள அனைத்து கிராமங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு இந்நோய்க்கான தடுப்பூசி போடப்பட வேண்டும். இந்த தடுப்பூசி போடுவதற்கு 8 டாக்டர்கள், பணியாளர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு இந்த பகுதியில் ,இந்நோய்க்கான தடுப்பூசி போடப்படும். நோய் பாதிப்பு இல்லாத இடங்களில் தடுப்பூசி போடக்கூடாது. எனவே மற்ற பகுதிகளை தீவிரமாக கண்காணித்து வருகிறோம்,என்றார்.

## விவசாய திறன் வளர்த்தல் பயிற்சி

புதூர்:புதூர் வட்டார அட்மா திட்டத்தின் படி முத்துச்சாமிபுரம் மற்றும் சென்னமரெட்டிபட்டி கிராமத்தில் விவசாய ஆர்வாளர் குழுக்களுக்கான திறன் வளர்த்தல் பயிற்சி முகாம் நடந்தது.புதூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் முருகப்பன் தலைமை வகித்து அட்மா திட்டத்தின் நோக்கம் செயல்பாடுகள் பற்றி விளக்கம் அளித்து பேசினார். பொருட்சிறப்பறிஞர் மாலதி வரவேற்றார். பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குநர் குருமூர்த்தி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் (அட்மா) தனபாலன் மற்றும் புதுவாழ்வுதிட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துப்பாண்டி, குழுக்களின் பயிற்சியாளர் மீனாகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்து கிராம விவசாய

ஆர்வாளர்களுக்கு தேவையான திறன் வளர்ச்சி பயிற்சியினை அளித்தனர். பொருட்சிறப்பறிஞர் துர்கா நன்றி கூறினார். பயிற்சியில் முத்துசாமிபுரம் மற்றும் சென்னமரெட்டிபட்டி கிராம விவசாய ஆர்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## புதூர் வட்டார விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு

புதூர்:புதூர் வட்டார விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வது தொடர்பான விளக்க அறிக்கையை புதூர் வேளாண்மை உதவி இயக்குநர் முருகப்பன் வெளியிட்டுள்ளார். அவர் கூறியுள்ளதாவது:- புதூர் வட்டாரத்தில் இயல்பான மழை கிடைக்காததால் பயிரிடப்பட்ட பயிர்கள் அனைத்தும் காயும் நிலையில் உள்ளது. இனிமேல் மழை கிடைத்தாலும் சரியான மகசூல் பெற வாய்ப்பில்லை எனவே புதூர் வட்டார விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பயிர் காப்பீட்டிற்கான பீரிமியத்தொகை மிகவும் குறைவாகவும். விவசாயிகள் தாங்கள் பயிரிட்ட பயிர்களுக்கேற்ற பீரிமியத்தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்து பயன்பெற வேண்டும். பீரிமியத்தொகை ஏக்கருக்கு பாசிபயிறு ரூ.34, உளுந்து ரூ.36, கம்பு ரூ.65, மக்காச்சோளம் ரூ.137, எள் ரூ.79, சூரியகாந்தி ரூ.116, சோளம் ரூ.48, பருத்தி ரூ.356 ஆகும். எனவே விவசாயிகள் இந்த சந்தர்பத்தை தவறாமல் பயன்படுத்தி பயனடையுவும் மற்றும் பயிர் காப்பீடு மேற்கொள்ள தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் அல்லது வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது புதூர் வேளாண்மை விரிவாக்க மையம் ஆகிய இடங்களில் நேரில் சென்று உரிய படிவங்களில் பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று புதூர் வேளாண்மை உதவி இயக்குநர் முருகப்பன் தெரிவித்துள்ளார்.

## விதை உற்பத்தி பயிற்சி

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டார வேளாண் துறை சார்பில் விதை கிராமத்திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்துகள் விதை உற்பத்தி பயிற்சி நாகதேவன்பாளையம் யூனியன் துவக்கப்பள்ளியில் நடந்தது.

ஆட்மா திட்ட உழவர் ஆலோசனை குழுத்தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். பஞ்சாயத்து துணைத் தலைவர் ஜெகதீஸ்வரன் முன்னிலை வகித்தார்.

பயிற்சியின் நோக்கம், நிலக்கடலை, எள், தென்னை, ஆமணக்கு உள்ளிட்ட பயிர்களில் அதிக மகசூல் எடுக்கும் நவீன யுக்திகள் மற்றும் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்து கோபி வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி பேசினார்.

நாகதேவன்பாளையம், குறவன்பாளையம், காவேரிபாளையம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## காய் விளைச்சல் அதிகரிப்பு மார்க்கெட்டில் விலை வீழ்ச்சி

கரூர்: விளைச்சல் அதிகரித்துள்ளதால், கரூர் தினசரி மார்க்கெட்டுக்கு காய்கறி வரத்து உயர்ந்துள்ளது. இதனால், விலை வீழ்ச்சியடைந்து வருகிறது.

கரூரில், காமராஜ் தினசரி காய்கறி மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இங்கு, 200க்கும் மேற்பட்ட கடைகளில் காய்கறிகம் விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது, காய்கறிகள் விளைச்சல் அமோகமாக இருக்கிறது.மேலும் மார்கழி மாதத்தில் முகூர்த்த நாட்கள் இல்லாததால், விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இது குறித்து காமராஜ் மார்க்கெட் அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் இளங்கோவன் கூறியதாவது:

பருவநிலை சாதகமாக இருப்பதால், மலைப்பகுதிகளில் விளையும் காய்காறி விளைச்சல் கூடி இருக்கிறது.

இதனால், விலை குறைந்துள்ளது. மேட்டுப்பாளையம், ஊட்டி பகுதிகளில் விளையும் கேரட் வரத்து, இரண்டு டன்னிலிருந்து, மூன்று டன்னாக அதிகரித்துள்ளது. இதனால், கேரட் விலை, 10 முதல், 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதே போல திண்டுக்கலில் இருந்து அவரைகாய், வரத்து, 12 டன் அளவில் உயர்வால், 40 ரூபாயில் இருந்து, 15 ரூபாய்க்கு சரிந்துள்ளது.உருளை கிழங்கு, 18 லிருந்து, 16 ரூபாய்க்கும், தக்காளி, 16லிருந்து, 12 ரூபாய்க்கும், வெண்டை, 16 லிருந்து, 13 ரூபாயாகவும் விலை குறைந்துள்ளது. கத்தரி, 16 ரூபாய்க்கும், பீன்ஸ், பீட்ரூட், 12 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கடும் பனிபொழிவால் உதிரும் முருங்கை "பூ'

கரூர்: கடும் பனிப்பொழிவால், அரவக்குறிச்சி பகுதியில் பயிரிடப்பட்டுள்ள முருங்கை மரங்களில் இருந்து பூக்கள் உதிர துவங்கியுள்ளது. இதனால், முருங்கை சாகுபடி பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்திலேயே கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டாரத்தில் தான் அதிகளவில் முரு ங்கை பயிரிடப்படுகிறது. குறிப்பாக கொத்தப்பாளையம், வெஞ்மாங்கூடலூர், தடாகோவில், ஈசநத்தம்,

அம்மாப்பட்டி, சாந்தப்பாடி உள்ளிட்ட, 30க்கும் மேற்பட்ட குக்கிராமங்களில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் முருங்கை பயிரிடப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் கார்த்திகை முதல், தை மாதம் வரை, கடுமையான பனிக்காலமாகும். அப்போது, முருங்கை மரத்தில் உள்ள பூக்கள் உதிர்ந்து, கருகி விடும். கடந்தாண்டை விட, நடப்பாண்டு கடந்த கார்த்திகை மாதம் முதல், கரூர் மாவட்டத்தில் கடுமையான பனிபொழிவு நிலவி வருகிறது. இதனால், அரவக்குறிச்சி பகுதியில் உள்ள முருங்கை மரங்களில் இருந்து, பூக்கள் கருகி உதிர துவங்கியுள்ளது. இதனால், விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர்.

இதுகுறித்து முருங்கை விவசாயிகள் கூறுகையில், ""கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பகுதியில் நடப்பாண்டு எதிர்பார்த்த அளவில் மழை இல்லை. இதனால், முருங்கை சாகுபடி ஏற்கனவே குறைந்துள்ளது. இந்நிலையில், நடப்பாண்டு கடும் பனிபொழிவால், முருங்கை பூக்கள் கருகி, உதிர துவங்கியுள்ளது. இ தனால், நடப்பாண்டு முருங்கை உற்பத்தி பாதிக்க வாய்ப்புள்ளது. உற்பத்தி குறைவால், வரும் திருமண சீசனில் முருங்கைக்காய் விலை கடுமையாக உயர வாய்ப்புண்டு. எனவே, பனிபொழிவா ல் முருங்கை மரங்களில் உள்ள பூக்கள் கருகி, உதிருவதை தடு க்க, மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்," என்றனர்.

## கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு தகவல் மையம்

வேலாயுதம்பாளையம்: ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலை சார்பில், கரும்பு விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் வகையில், தகவல் தொடர்பு மையம் தொடங்கப்பட்டுள்ளது. இது குறித்து, ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ரவீந்திரசிங் வெளியிட்ட அறிவிப்பு: கரும்பு சாகுபடிக்கு நிலம் தயாரித்தல், மண் தன்மை, உர நிர்வாகம் மற்றும் கரும்பு சம்மந்தமாக தொழில்நுட்பங்கள், கரும்பு பணம் பட்டுவாடா, வெட்டு தொழிலாளர்கள், வாகன போக்குவரத்து பணம் ஆகியவற்றுடன் விவசாயிகள், தங்களுக்கு ஏற்படும் அனைத்து சந்தேகங்களையும் நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

கரும்பில் இயந்திரமயமாக்கல், சொட்டுநீர் பாசனம் போன்ற புது முயற்சிகளுடன் இந்த மையத்தையும் துவங்கியுள்ளோம். இந்த மையத்தில், 1800-102-2400 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு, விவசாயிகள் பயன் பெறலாம், என்று தெரிவித்துள்ளார்.

## இடி, மின்னலுடன் பலத்த மழை

புதுக்கோட்டை: நீண்ட இடைவெளிக்கு பின், புதுக்கோட்டையில் நேற்று மாலை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. மாலை துவங்கிய மழை, இரவு வரை இடைவிடாது கொட்டி

தீர்த்தது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால், கடும் வறட்சி நிலவியது. நீர்நிலைகள் அனைத்தும் தண்ணீரின்றி வறண்டு விட்டது. பருவமழையை எதிர்பார்த்து சாகுபடி செய்யப்பட்ட சம்பா பயிர்கள் கருக துவங்கியது. நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துவிட்டதால், குடிநீர் பற்றாக்குறையும் நிலவியது. இதையடுத்து புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்கவேண்டும் என, விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் வலுக்கத் துவங்கியது. விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்கள் சார்பில் அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம், தர்ணா, முற்றுகை, மறியல் என, பல்வேறு போராட்டங்களும் தொடர்ந்தது. இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை, மாவட்ட நிர்வாகம் துவக்கியது. பயிர் சாகுபடி நிலவரம் மற்றும் வறட்சி நிலவரம் குறித்து புள்ளி விபரங்கள் சேகரித்து, அறிக்கை தாக்கல் செய்யுமாறு வி.ஏ.ஓ., ஆர்.ஐ., உள்ளிட்ட வருவாய்த்துறையினருக்கு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்மூலம் ஒன்றிரண்டு நாட்களில் தமிழக அரசிடமிருந்து வறட்சி மாவட்ட அறிவிப்பு வெளியாகலாம் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டது.

இதற்கிடையே நேற்று மாலை திடீரென்று பலத்த மழைய பெய்தது. சரியாக மாலை, 5.30 மணிக்கு இடி, மின்னலுடன் துவங்கிய மழை, இரவு வரை கொட்டி தீர்த்தது. இடைவிடாது பெய்த அடைமழையால் நகரின் பலப்பகுதிகளில் மழை தண்ணீர் மடை திறந்த வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது.

தோரண வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் மழை தண்ணீர் நிரம்பி வழிந்ததை காணமுடிந்தது. புதுக்கோட்டை மட்டுமின்றி, மாவட்டம் முழுவதும் இந்த மழை பரவலாக பெய்தது. தவித்த வாய்க்கு தண்ணீர் கிடைத்தது போல், கருகும் தருவாயில் உள்ள சம்பா பயிர்களுக்கு இந்த மழை பயனளிப்பாக அமைந்ததால், விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதே சமயம் தமிழக அரசிடமிருந்து வறட்சி மாவட்ட அறிவிப்பை எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு, திடீரென்று பெய்த இந்த மழை ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

## அரிசி, கோதுமை வெளி மார்க்கெட்டில் விற்பனை

சேலம்: "" ரேஷன் அரிசி, கோதுமை ஆகியவற்றை கள்ளத்தனமாக, இட்லி மற்றும் சப்பாத்தி தயாரிப்புக்கு, வெளிமார்க்கெட்டில், விற்பனை செய்துவிட்டு, தங்களுக்கு முறையாக, ரேஷன்

பொருட்கள் வினியோகம் செய்யப்படுவதில்லை" என்று கூறி, மிட்டாபுதூர் ரேஷன் கடையை நேற்று பொதுமக்கள் முற்றுகையிட்டு, சாலை மறியல் முயற்சியில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம், மிட்டாபுதூர் ரேஷன் கடையில், மிட்டாபுதூர், பம்பரக்காரன் தெரு, பெருமாள் கோவில் கரடு, ராமன் குட்டை தெரு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த, 3,000த்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்களை வாங்கி வருகின்றனர்.

பல மாதங்களாக, மிட்டாபுதூர் ரேஷன் கடையில், பொதுமக்கள் அலைக்கழிக்கப்பட்டும், அத்தியாவசிய பொருட்கள் முறையாக வினியோகம் செய்யாமலும், விற்பனையாளர்கள் அலட்சியம் காட்டினர். சகித்து கொண்டிருந்த பொதுமக்கள், ஆத்திரமடைந்து, நேற்று காலை, 10 மணிக்கு திடீரென்று, ரேஷன் கடை விற்பனையாளர்கள் மணிமேகலை, முஸ்தாக் ஆகியோரை முற்றுகையிட்டு, கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும், 100 க்கும் மேற்பட்டோர், ரேஷன் கடையில் நடக்கும் முறைகேடுகளை கண்டித்து, சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். சேலம் ஃபேர்லாண்ட்ஸ் போலீஸார், அவர்களை சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர். பின்னர் போலீஸ் பாதுகாப்புடன், ரேஷன் கடையில், அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டது.

அப்பகுதியை சேர்ந்த ரவி என்பவர் கூறியதாவது:

மிட்டாபுதூர் ரேஷன் கடைக்கு, காலை, 10 மணிக்கு விற்பனையாளர்கள் வருகின்றனர். அரை மணி நேரம் கூட, ரேஷன் கார்டுகளுக்கு பில் போடுவதில்லை. அனைத்து பொருட்களும் தீர்ந்துவிட்டது என்று கூறி, திருப்பி அனுப்பி விடுகின்றனர். ஆனால், இவர்கள், இரவு, 9 மணி வரை அமர்ந்து, கள்ளத்தனமாக வெளிமார்க்கெட்டுக்கு, அரிசி, கோதுமை ஆகியவற்றை விற்பனை செய்கின்றனர்.

இட்லி மாவு அரைப்பவர்கள், ஹோட்டல் கடை வைத்திருப்பவர்கள், சப்பாத்தி போடும் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் ஆகியோருக்கு, கடைக்கு வரும் அரிசி, கோதுமை ஆகியவற்றை முழுமையாக சப்ளை செய்துவிடுகின்றனர்.

சர்க்கரையை பொதுமக்களுக்கு வழங்காமல், போலீஸாருக்கு வழங்குகிறோம் என்று கூறி, எங்களுக்கு தர மறுக்கின்றனர். எத்தனை நாள், நாங்கள் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல், சிரமப்படுவது. வேறு வழியில்லாமல் தான் இன்று அனைவரும், முற்றுகை போராட்டம், சாலை மறியல் என்று இறங்கினோம்.

இவ்வாறு கூறினார்.

**மலையடிவார கிராம மக்கள் பீதி மழை ஏமாற்றியதால் மண் விற்கும் விவசாயிகள்**

நங்கவள்ளி: பருவமழை பொய்த்ததாலும், வறட்சியாலும் விவசாயிகள், விளை நிலத்தில் உள்ள மண்ணை விற்கும் வியாபாரிகளாக மாறியுள்ளனர். இதனால், விவசாய நிலங்கள் பள்ளத்தாக்குகளாக மாறிவருகிறது.

சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஒன்றியம், வனவாசி மலையடிவாரம் உள்ள சாணார்பட்டி, மூலக்காடு, தானாவதியூர், அருவாங்காடு, கொல்லங்காடு உள்ளிட்ட பகுதியில் தரமான செம்மண் காணப்படுகிறது. இங்குள்ள நிலங்களில் வேர்க்கடலை, பருத்தி, நெல் போன்ற பயிர்கள் நன்றாக வளர்ந்தது.

காலப்போக்கில், போதிய மழை பெய்யாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததாலும், பெரும்பாலான நிலங்களில் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்யாமல், தரிசாக போட்டு விட்டனர். ஆனால், செங்கல் தயாரிப்பதற்கு தேவையான தரமான செம்மண் இப்பகுதியில் இருந்ததால், சூளை உரிமையாளர்கள் இப்பகுதியில் உள்ள புறபோக்கு நிலத்தில் சட்டவிரோதமாக மண் அள்ளிச் சென்றனர்.

இதற்கு விவசாயிகள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியதால், விவசாயிகளிடம் பணம் கொடுத்து, பட்டா நிலங்களில் மண்ணை அள்ளி வருகின்றனர். இரவு நேரங்களில் ஒரே நாளில், 50க்கும் மேற்பட்ட வாகனங்களில் மண் அள்ளி சென்றதால், கிராமங்களில் அடிக்கடி விபத்து ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் அரசிடம் புகார் செய்ததாலும், மண் ஏற்றி செல்லும் லாரிகளுக்கு அபராதம் விதித்ததாலும், அருவங்காடு சுற்றுப்பகுதியில் மண் அள்ளுவதை சூளை உரிமையாளர்கள் நிறுத்தினர். ஆனால், சமீபகாலமாக வனவாசி மலையடிவாரம் செம்மண்ணன் வளவு பகுதியில், விவசாயிகளின் பட்டா நிலத்தில் பொக்லைன் மூலம் மண்ணை தோண்டி எடுத்துச் செல்கின்றனர். இதற்காக, விவசாயிகளுக்கு ஒரு லோடு மண்ணுக்கு, 800 ரூபாய் வழங்குகின்றனர். இதனால், செம்மண்ணன்வளவு கிராமத்தில் ஆங்காங்கே, 20 முதல், 30 அடி ஆழத்துக்கு ஏராளமான பள்ளத்தாக்கு உருவாகியுள்ளது.

பள்ளத்தாக்குகளால் நிலச்சரிவு, விபத்து போன்றவை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், செம்மண்ணன் வளவு கிராம மக்கள் பீதியில் உள்ளனர். சட்டவிரோதமாக செம்மண் அள்ளுவதை, மாவட்ட நிர்வாகம் தடுக்க வேண்டும், என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தீவன விலை கடும் உயர்வு கறவை மாடு வளர்ப்பவர்கள் தவிப்பு**

தம்மம்பட்டி: பால் கொள்முதல் விலை உயராத நிலையில், தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், கறவை மாடு வளர்க்கும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்..

தம்மம்பட்டி சுற்று வட்டாரத்தில், பால் உற்பத்திக்காகவும், இயற்கை உரமான சாணத்துக்காகவும் விவசாயிகள் பெரும்பாலானோர், பசு மாடுகளை வளர்த்து வருகின்றனர். பால் கறக்கும் மாடுகளை, பல ஆயிரம் ரூபாய்க்கு வாங்கும் விவசாயிகள், பசுந்தீவனத்துடன், அடர் தீவனமான தவிடு, பருத்திக்கொட்டை, கடலை புண்ணாக்கு, மரவள்ளி கழிவு (திப்பி) மற்றும், மக்காச்சோளம், அரிசி மாவு போன்றவற்றை தீவனமாக கொடுக்கின்றனர்.

இந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால், நிலக்கடலை, நெல் போன்றவற்றின் உற்பத்தி பெரிதும் குறைந்தது. போதிய விலை இல்லாததால் மரவள்ளியையும் அதிகளவில் விவசாயிகள் பயிரிடவில்லை. இதனால், டிசம்பர் மாதம் முதல், தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ புண்ணாக்கு, 40லிருந்து, 58 ரூபாயாகவும், தவிடு மூட்டை, 400லிருந்து, 500 ரூபாயாகவும், மரவள்ளி கழிவு ஒரு கூடை, 20லிருந்து, 50 ரூபாயாகவும் உயர்ந்துவிட்டது.

ஏற்கெனவே, தனியார் பால் நிறுவனங்கள், கொள்முதல் விலையை, 18லிருந்து, 16 ரூபாயாக குறைத்து விட்டன. இந்நிலையில், தீவனங்களின் விலை உயர்வு, கறவைமாடு வைத்துள்ள விவசாயிகளுக்கு பெரும் செலவை ஏற்படுத்தி, வருவாயை குறைத்துள்ளது.

## காளான் வளர்ப்பு பயிற்சிக்கு இந்தியன் வங்கி அழைப்பு

நாமக்கல்: "இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் சார்பில், காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது' என, பயிற்சி மைய இயக்குனர் ராஜூ தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல், இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில், ஜனவரி இறுதி வாரத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி துவங்க உள்ளது. காளான் வளர்ப்பு மற்றும் பண்ணை அமைப்பது தொடர்பாக, அனைத்து பயிற்சியும் கற்றுத்தரப்படும்.

பெண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஆண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர், தொழில் முனைவோர் பயிற்சியல் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ள தகுதி வாய்ந்தோர், இந்தியன் வங்கி மற்றும் அதன் கிளைகளில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் வரும், 17ம் தேதிக்குள் இந்தியன் வங்கி சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம், ரவீன் பிளாசா, திருச்சி மெயின்ரோடு, ரயில்வே மேம்பாலம் அருகில், நாமக்கல், என்ற முகவரிக்கு

அனுப்ப வேண்டும். பயிற்சி கட்டணம், இருப்பிடம் இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் விற்பனை சங்கத்தில் ரூ.40 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 40 லட்சம் ரூபாய்க்கு ஏலம் நடந்தது.

தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்து, நாமகிரிப்பேட்டையில்தான் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. இங்கு வாரந்தோறும் செவ்வாய்கிழமை ஏலம் நடக்கும். அதில், 18, தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிலில் உள்ள விவசாயிகள், மஞ்சள் ஏலத்துக்கு கொண்டு வருவர். பல்லேறு நிறுவனங்கள் மற்றும் வியாபாரிகள் நேரடியாக வந்து மஞ்சளை ஏலம் எடுக்கின்றனர்.

நேற்று நடந்த ஏலத்தில், 1,300 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. அதில், விரலி ரகம் அதிகபட்சம் ஒரு மூட்டை, 9,339 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 5,869, ரூபாய்க்கும் ஏலம் போனது. குண்டு ரகம் அதிகபட்சம் ஒரு மூட்டை, 6,939க்கும், குறைந்தபட்சம், 3,619 ரூபாய்க்கும் விலை போனது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 13 ஆயிரத்து, 888க்கும், குறைந்தபட்சம், 8,900, ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில், 40 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## தர்மபுரி மாவட்டத்தில் ஆடுகளுக்கு தட்டுப்பாடு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் ஆடுகள் தட்டுபாடு காரணமாக வெளிமாநிலத்தில் இருந்து ஆடுகள் வாங்கி வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம் சந்தைகளில் ஆடுகள் விற்பனை நடந்து வருகிறது. மாவட்ட மக்கள் மத்தியில் ஆட்டு கறிக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து சந்தைகளில் ஆடு விற்பனை அதிகளவில் நடந்து வருகிறது. ஆடுகளின் விலையும் உயர்ந்துள்ளது.

தமிழக அரசு விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்துக்கு அதிகளவில் பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்க வாங்கி வருவதால், கடந்த சில மாதங்களாக சந்தையில் ஆடுகளுக்கு தட்டுபாடு ஏற்பட்டு வருகிறது.

பொங்கல் திருநாளை அடுத்து வரும் கரி நாள் அன்று மாவட்டத்தில் பெரும்பலான மக்கள் ஆடு வெட்டி தங்களது உறவினர்களுக்கு விருந்து வைப்பது வழக்கம். பலர் கடைகளில் ஆட்டு கறி

வாங்கி சமைப்பார்கள்.

இதற்காக தர்மபுரி மாவட்ட சந்தைகளில் பொதுமக்கள் அதிகளவில் ஆடுகளை வாங்கி வருகின்றனர். சந்தைக்கு ஆடுகள் வரத்து குறைந்துள்ளதால் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த வியாபாரிகள் கர்நாடகா, மத்திய பிரதேச மாநிலங்களில் இருந்து ஆடுகளை வாங்கி வந்து சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

இது குறித்து பாப்பாரப்பட்டியை சேர்ந்த வியாபாரி வடிவேல், 42 கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், 100க்கும் மேற்பட்ட ஆட்டு வியாபாரிகள் உள்ளோம். மாவட்டத்தில் போதிய மழையில்லாத காரணத்தாலும், ஆடு வளர்ப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாலும் சந்தைக்கு வரும் ஆடுகளின் வரத்து குறைந்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த பெரும்பலான வியாபாரிகள் கடந்த சில மாதங்களாக கர்நாடகா, மத்திய பிரேதச மாநிலங்களில் இருந்து ஆடுகளை வாங்கி வந்து தர்மபுரி மாவட்ட சந்தைகளில் விற்பனை செய்து வருகிறோம்.

நேற்று (ஜன.,08) தர்மபுரியை அடுத்த நல்லம்பள்ளி, பென்னாகரம் சந்தையில், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனை செய்யப்பட்டது. இங்கு சேலம், நாமக்கல் மாவட்டங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வந்து ஆடுகளை வாங்கி சென்றனர்.

வரும், 13ம் தேதி தர்மபுரியில் நடக்கும் சந்தையிலும், வரும், 15ம் தேதி நல்லம்பள்ளி,காரிமங்கலம், பென்னாகரத்தில் நடக்கும் சந்தைகளில், 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனையாகும். இவ்வாறு கூறினார்.

* ஜமுனா பாரி ஆடு: நல்லம்பள்ளி சந்தையில் நார்த்தம்பட்டியை சேர்ந்த, மணி என்ற விவசாயி, 100 கிலோ எடை கொண்ட ஜமுனா பாரி ஆடு ஒன்றை விற்பனைக்கு கொண்டு வந்தார். அந்த ஆட்டின் விலை, 45 ஆயிரம் ரூபாய் என வியாபாரிகளிடம், மணி கூறினார்.

அந்த ஆட்டை பல வியாபாரிகள், 30 ஆயிரம் ரூபாய் வரை கேட்டனர். ஆனால், தான் கூறிய, 45 ஆயிரம் ரூபாய் விலைக்கு ஆட்டை வியாபாரிகள் கேட்காததால் மணி ஆட்டுடன் வீடு திரும்பினார். அவர் கடந்த, இரு ஆண்டுகளாக, எட்டு ஜமுனாபாரி ஆடுகளை நல்லம்பள்ளி, தர்மபுரி சந்தையில், 40 ஆயிரத்துக்கு விற்பனை செய்துள்ளதாக தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கு வேளாண் உபகரணம் வழங்கும் விழா

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் பேரியல் மேலாண்மை திட்டத்தில், விவசாயிகளுக்கு வேளாண் உபரகரணங்கள்

வழக்கும் விழா தர்மபுரி கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடந்தது.

கலெக்டர் லில்லி, 28 லட்சத்து, 22 ஆயிரத்து, 335 ரூபாய் மதிப்பிலான , நான்கு பவர் டில்லர், ஒரு டிராக்டர், ஏழு ரோட்டேவேட்டர், ஆறு களை எடுக்கும் இயந்திரம், 23 விசைத்தெளிப்பான், ஐந்து தீவன புல் நறுக்கும் இயந்திரம், ஒரு உழவு இயந்திர உபகரணம் ஆகிய, எட்டு லட்சத்து, 66 ஆயிரத்து, 105 ரூபாய் மதிப்பிலான மானிய விலை உபகரங்களை வழங்கினார்.

டி.ஆர்.ஓ., ராமர், வேளாண்மை இணை இயக்குனர் மனோகரன், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் முருகேசன், உதவி செயற்பொறியாளர் பச்சியப்பன், அரூர் உதவி செயற்பொறியாளர் மூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சி மாவட்டங்கள் விரைவில் அறிவிப்பு? பயிர் இழப்பு கணக்கெடுப்பால் எதிர்பார்ப்பு

புதுக்கோட்டை: வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை உட்பட டெல்டா பகுதி மாவட்டங்களை, வறட்சி மாவட்டங்களாக, தமிழக அரசு விரைவில் அறிவிக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், காவிரி டெல்டா பகுதிகுட்பட்டதாக இருந்தும், கடைமடைப் பகுதியாக உள்ளதால், பருவமழையை நம்பியே விவசாயம் நடக்கிறது. தென்மேற்கு பருவமழையை நம்பி குறுவை சாகுபடியும், வடகிழக்கு பருவமழையை நம்பி சம்பா சாகுபடியும் நடப்பது வழக்கம்.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டதால், குறுவை சாகுபடி அடியோடு முடங்கியது. இந்நிலையில் நிலம் புயலால், ஒன்றிரண்டு நாள் மழை பெய்ததாலும், மேகமூட்டத்துடன் பருவமழை பெய்வதற்கான அறிகுறி தென்பட்டதாலும், மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் சம்பா சாகுபடியை துவக்கினர்.

மாவட்டம் முழுவதும், 80 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழையும் பொய்த்துவிட்டது. நீர்நிலைகள் அனைத்தும் தண்ணீரின்றி வறண்டு விட்டதால், பயிர் கருகி வருகிறது. விவசாயிகள் பயிர்களை காப்பாற்ற முடியாமல் பரிதவித்து வருகின்றனர். இதற்கிடையே காவிரியில் தண்ணீர் திறந்துவிட, கர்நாடகா அரசு மறுத்துவிட்டதால், கல்லணை பாசனத்தை நம்பியுள்ள டெல்டா பகுதிகளிலும் கடும் வறட்சி நிலவுகிறது.

அப்பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர் கருநடவு (அரை பருவம்) ஏறிய நிலையில், தண்ணீரின்றி கருகி வருகிறது. பயிர் கருகியதால் மனவேதனையடைந்த, அம்மாவட்ட டெல்டா

பகுதி விவசாயிகள், இருவர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்ட துயர சம்பவமும் நடந்தது.

தற்போது கோடையை மிஞ்சும் விதத்தில் வெயில் வாட்டி வதைப்பதால், மாவட்டம் முழுவதும் வறட்சியான சூழல் நிலவுகிறது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், பம்புசெட் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளும் நிலைகுலைந்து போய் உள்ளனர். தண்ணீர் மற்றும் தீவன பற்றாக்குறையினால் கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளது.

வழக்கத்துக்கு மாறாக கடும் வறட்சி நிலவுவதால், புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்கவேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைளை வலியுறுத்தி, புதுக்கோட்டை உள்ளிட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளும், விவசாய அமைப்புகளும் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றன.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, புதுக்கோட்டை உட்பட டெல்டா பகுதி மாவட்டங்களை, தமிழக அரசு விரைவில் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக, புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா பயிர் சாகுபடி நிலவரம், இதர பயிர் சாகுபடி நிலவரம், வறட்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு, கருகியுள்ள பயிர், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு ஆகியவை குறித்து அறிக்கை தயார் செய்யுமாறு வி.ஏ.ஓ.,க்களுக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இதற்காக, புதுக்கோட்டை, அறந்தாங்கி ஆர்.டி.ஓ., அலுவலகங்களில், நேற்று ஆர்.டி.ஓ., தலைமையில், வி.ஏ.ஓ., மற்றும் ஆர்.ஐ.,க்கள் கூட்டம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

## நீலகிரி செம்மறியாடு இனத்தை காப்பாற்ற ரூ.76 லட்சம் நிதி ஒதுக்கீடு: துணைவேந்தர்

தஞ்சாவூர்: ""தமிழகத்தில், அழிந்து வரும் நீலகிரி செம்மறியாடு இனத்தை காப்பாற்றும் வகையில், 76 லட்சம் ரூபாய் நிதியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படும்,'' என, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை துணைவேந்தர் பிரபாகரன் கூறினார்.

தஞ்சை அருகே பிள்ளையார்பட்டியிலுள்ள கால்நடை பல்கலை மற்றும் ஆராய்ச்சி மையத்தில், ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பு பற்றிய கண்காட்சி நடந்தது. கண்காட்சி துவக்கவிழாவுக்கு, கலெக்டர் பாஸ்கரன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். பேராசிரியர் புண்ணியமூர்த்தி வரவேற்றார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை துணைவேந்தர் பிரபாகரன் முன்னிலை வகித்தார். கண்காட்சியில், கலப்பின காளைகள், நீலகிரி செம்மறியாடுகள், நன்னீர் மீன் வளர்ப் பு, கலப்பின காடைகள், ஜப்பா ன் காடைகள் வளர்ப்பு முறை கு றி த்து விளக்கம் அளிக்கப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை விரிவாக்க கல்வி இயக்குனர் சந்திரகாசன், ஒரத்தநாடு கால்நடை கல்லூரி முதல்வர் வீரபாண்டியன், பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் அபுகலாம், இந்தியன் வங்கி மண்டல மேலாளர் ரகுவத்சாரி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சையது சமீம் உள்பட பலர் பேசினார்.

பின் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை துணைவேந்தர் பிரபாகரன் நிருபர்களிடம் கூறியதாவது:

டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்த, ஒருங்கிணைந்த வேளாண் பண்ணை திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் கால்நடை, மீன் வளர்ப்பு ஆகியவற்றை ஊக்குவிக்க உதவிகளை வழங்குகிறது. நீலகிரி செம்மறியாடு இன ம் அழியும் சூழல் நிலவுகிறது. இவ்வகை ஆடுகள் தமிழகத்தில், 10 ஆயிரம் இருந்தன. ஆனால் தற்போது வெறும், 700 தா ன் உள்ளன. இந்த இனம் அழியாமல் காக்க, 76 லட்சம் ரூபாய் நி தியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. இந்த திட்டமும் நடப்பா ண்டு முதல் செயல்படுத்தப்படும். இதுதவிர கலப்பின காளைகளிலிருந்து உயிரணுக்கள் எடுத்து, புதிய கலப்பின காளைகளை உருவாக்க, இரண்டு கோடியே, இரண்டு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டமும் உடனடியாக செயல்பாட்டுக்கு வந்துள்ளது. பொதுவாக, வெள்ளாடுகள் ஒன்றுக்கும் மேற்பட்ட குட்டிகளை ஈனும் தன்ø ம கொண்டது. ஆனால் செம்மறியாடுகள் ஒரு குட்டிக்கு மேல் ஈனாது. அதனால் செம்மறி ஆடுகளின் வீரிய தன்மையை கூட்டி, ஒன்றுக்கும் மேற்பட்ட குட்டிகளை ஈனும் திட்டத்துக்கு, இரண்டு கோடியே, 24 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் டெல்டா மாவட்டங்களில் நன்னீர் மீன் வளர்ப்பு நல்லமுறையில் உள்ளதால், இத்திட்டத்தையும் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## கோகிலாபுரத்தை சுற்றி ஏழு கிராமங்களில்கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசி

தேனி:கோகிலாபுரத்தை சுற்றி உள்ள ஏழு கிராமங்களில், கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.உத்தமபாளையம் அருகே கோகிலாபுரத்தை சேர்ந்த விவசாயி சசிகுமாருக்கு சொந்தமான 10 மாடுகள் "அடைப்பான் நோயால்" அடுத்தடுத்து இறந்தன. இதனை தொடர்ந்து இந்நோய் மேலும் பரவாமல் இருக்க, கோகிலாபுரம், ராயப்பன்பட்டி, வாய்க்கால்பட்டி, ராமசாமிநாயக்கன்பட்டி, ஆனைமலையான்பட்டி, சின்னஓவுலாபுரம், முத்துலாபுரம், உத்தமபாளையம் கிராமங்களில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் அடைப்பான்நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

கால்நடை இணை இயக்குனர் சந்திரசேகரன் கூறியதாவது: அடைப்பான் நோய் எளிதில் பரவக்கூடியது. எனவே இந்நோய் பாதித்த கிராமத்திலும், சுற்றிலும், 8 கி.மீ., தொலைவிற்குள் உள்ள அனைத்து கிராமங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு இந்நோய்க்கான தடுப்பூசி போடப்பட வேண்டும். இந்த தடுப்பூசி போடுவதற்கு 8 டாக்டர்கள், பணியாளர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு இந்த பகுதியில் ,இந்நோய்க்கான தடுப்பூசி போடப்படும். நோய் பாதிப்பு இல்லாத இடங்களில் தடுப்பூசி போடக்கூடாது. எனவே மற்ற பகுதிகளை தீவிரமாக கண்காணித்து வருகிறோம்,என்றார்.

## சர்க்கரை கொள்முதல் விலை உயருகிறது



புதுடில்லி:மத்திய அரசு, பொது வினியோக திட்டத்திற்காக, ஆலைகளிடம் கொள்முதல் செய்யும் சர்க்கரையின் விலையை கிலோவிற்கு, 2 ரூபாய்க்கும் அதிகமாக உயர்த்துவது குறித்து பரிசீலித்து வருகிறது.சென்ற 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்.,-செப்.,), சர்க்கரை கொள்முதல் விலை, கிலோவுக்கு, 19.04 ரூபாய் என, மத்திய அரசு நிர்ணயித்திருந்தது.

இதையடுத்து, நடப்பு 2012-13ம் சந்தைப் பருவத்திற்கான சர்க்கரை கொள்முதல் விலையை, கிலோவிற்கு, 2 ரூபாய்க்கும் அதிகமாக உயர்த்தி, 22 ரூபாயாக நிர்ணயம் செய்யும் என, தெரிகிறது.கொள்முதல் விலை உயர்வு அமலுக்கு வரும் பட்சத்தில், மத்திய நிதி அமைச்சகத்திற்கு, 400 - 500 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு, ஆலைகளிடம் கொள்முதல் செய்யும் சர்க்கரையை, கிலோ, 13.50 ரூபாய் என்ற விலையில், பொது வினியோக திட்டத்தின் கீழ் வழங்குகிறது. இந்த வகையில், நியாய விலை கடைகள் மூலம், ஆண்டுக்கு, 27 லட்சம் டன் சர்க்கரை விற்பனை செய்யப்படுகிறது.நடப்பு பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.30 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த பருவத்தில், 2.60 கோடி டன்னாக இருந்தது.நடப்பாண்டு உள்

நாட்டில் சர்க்கரைக்கான தேவை, 2.10-2.22 கோடி டன் என்ற அளவிற்கே இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

08th jan 2013

**மிளகாய் பயிர்காப்பீடு**

ராமநாதபுரம்:மிளகாய் விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகள் ஜன., 15க்குள் பிரிமியம் செலுத்தலாம். பொங்கல் விடுமுறை வருவதால் ஜன., 12க்குள் செலுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு ரூ. 254, சிறு மற்றும் குறு விவசாயிகள் ரூ. 226 செலுத்த வேண்டும். வி.ஏ.ஓ., மூலம் அடங்கல் நகல் பெற்று தொகையை செலுத்தலாம்.

**வேளாண்மை பிரச்சாரம்**

சிங்கம்புணரி; சிங்கம்புணரி ஒன்றிய கிராமங்களில் வேளாண் மை விளம்பர பிரச்சாரம் நடந்தது. எம்கோயில்பட்டி, சிவபுரிப்பட்டி, வேங்கைப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் வோளண்மை தொழில்நுட்பம், தோட்டக்கலை, பொறியியல், விற்பனை, மீன்வளம் பற்றிய திட்டம், தொழில் நுட்பங்கள் பற்றிய படக்காட்சி மூலம் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

## தென்னை சாகுபடியில் வினையியல் இடர்பாடுகளும் நிவர்த்தி முறைகளும்



தென்னை மரங்கள் உரச்சத்துக்கள் முழுமையாகப் பெறுவதற்கும், தென்னை வேர்களுக்கு காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கும் புதிய இளம் வேர்களின் வளர்ச்சியைத் தூண்டுவதற்காகவும் வருடத்திற்கு இருமுறை அதாவது ஜூன் - ஜூலை மற்றும் டிசம்பர் - ஜனவரி மாதங்களில் அதிக ஆழமின்றி (10 செ.மீ. முதல் 15 செ.மீ. ) மேலாக உழவேண்டும். ஆழ உழுதால் மேல் மட்டத்தில் உள்ள தென்னை வேர்கள் அறுபடும்.

**ஒல்லிக்காய்கள்:**

தென்னையில் 3 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை ஒல்லிக் காய்கள் ஏற்படுகின்றன. மானாவாரி தோப்புகளிலும் சரியாக பராமரிக்கப்படாத தோப்புகளிலும் ஒல்லிக்காய்கள் அதிகமாக தோன்றுகின்றன.

**நிவர்த்தி முறை:**

* தரமான கன்றுகளை நடவு செய்தல்.

* பரிந்துரை செய்யப்பட்ட உர அளவிற்கு மேலாக மரத்திற்கு கூடுதலாக ஒரு கிலோ பொட்டாஷ் மற்றும் 200 கிராம் போராக்ஸ் உரங்களை தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு இடுதல்.

* தேனீக்களை வளர்த்தல்.

* 200 மில்லி தென்னை டானிக் ஆண்டுக்கு இரு முறை கொடுத்தல் போன்றவைகளாகும்.

**நுனி சிறுத்தல்:**

மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மரத்தில் நுனிப்பகுதி பென்சில் முனை போன்று காணப்படும். காய்களின் உற்பத்தி குறைந்து சிறுத்துக் காணப்படும். இலைகளின் இணுக்குகளில் பச்சையம் குறைந்து காணப்படும். மட்டைகளின் நிறம் மற்றும் அகலம் குறைந்து சிறுத்துக்காணப்படும். பாளைகளின் உற்பத்தி குறைந்தும், சிறுத்தும் தோன்றும். இறுதியில் மரம் பட்டுவிடும்.

**தீர்வுகள்:**

* மரங்களை வெட்டிஅகற்றிவிட்டு தரமான புதிய கன்றுகளை நடவு செய்தல்.
* கோடையில் தண்ணீர் பாய்ச்சுவது.
* பரிந்துரை செய்யப் பட்ட உரங்களை இடுவது.
* அரை கிலோ நுண்ணூட்டக்கலவை அல்லது 200 மில்லி தென்னை டானிக் இரு முறை இடவேண்டும்.

**குரும்பை உதிர்தல்:**

தென்னையில் குரும்பை உதிர்தல் ஒரு முக்கியமான பயிர் வினையியல் இடர்பாடாகும். பாளை வெடிக்கத் துவங்கியது முதல் 3-4 மாதங்கள் வரை குரும்பைகள் தொடர்ந்து கொட்டிக் கொண்டே இருக்கும்.

**நிவர்த்தி முறைகள்:**

* தோப்புகளில் ஒன்று அல்லது இரண்டு மரங்களில் பாரம்பரிய குணத்தால் குரும்பை முழுவதும் கொட்டிவிடும். காய்கள் பிடிக்காது. இவ்வகை மரங்களை அகற்றிவிட்டு தரமான கன்றுகளை நடவு செய்ய வேண்டும்.
* மண்ணின் கார அமிலத்தன்மை (பிஎச்) குறைவாகவும் அல்லது அதிகமாகும்போது குரும்பைகள் உதிரும். எனவே மண் ஆய்வு செய்து அமிலத்தன்மை கொண்ட மண்ணுக்கு சுண்ணாம்பும் காரத்தன்மைக்கு ஜிப்சம் இட்டும் சரிசெய்யலாம்.
* தட்பவெப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு நீர் பாய்ச்ச வேண்டும். பொதுவாக 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சுதல் அவசியம்.
* நுண்ணூட்டச் சத்து பற்றாக் குறையினால் குரும்பைகள் உதிரும். தென்னைக்கு பரிந்துரை செய்யப்பட்ட கலவை மரம் ஒன்றிற்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை அரை கிலோ இடலாம். அல்லது தென்னை டானிக் 200 மில்லியை வேர் மூலம் செலுத்தலாம்.

**இலை விரியாமை:**

தென்னை இலைகள் சிறுத்து விரிவடையாமல் காணப்படும். இவைகள் சாதாரண முறையில்

விரிவடையாமல் ஒன்றுக்கு ஒன்று பின்னிக்கொண்டு இலைகள் வெளிவர இயலாத நிலையில் இருக்கும். சில சமயங்களில் குரும்பைகளும் உதிர்ந்து விழும்.

**நிவர்த்தி முறைகள்:**

மரம் ஒன்றிற்கு 50 கிராம் போராக்ஸ் உரத்தை அரை கிலோ மணலுடன்கலந்து இரண்டு முறை தொடர்ந்து மூன்று மாத இடைவெளியில் இட்டு மண் அணைக்க வேண்டும்.

**கொ.பாலகிருஷ்ணன், பேராசிரியர் (பயிர் வினையியல்)**

**மற்றும் கு.சிவசுப்பிரமணியம்,**

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**விதை அறிவியல் மற்றும் நுட்பவியல் துறை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104.**

## மல்லிகை, வெண்டை பயிர்களில் செஞ்சிலந்தி தாக்குதல்



வறண்ட கோடையில் உங்கள் மல்லிகை, வெண்டைப் பயிர்களில் இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதை கவனித்திருப்பீர்கள். வெண்டையில் காய்களும் மஞ்சள் நிறமாகி வெளுத்துப் போய்விடும். இந்நிறமாற்றம் செஞ்சிலந்தி தாக்குதலால் ஏற்படுகின்றது. செஞ்சிலந்தி தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

**செஞ்சிலந்தி தாக்குதல் அறிகுறிகள்:**

பாதிப்பு முதலில் முதிர்ந்த இலைகளில் தோன்றி இளம் இலைகளுக்கு பரவும். இலைகளின் மேற்புறத்தில் மஞ்சள் நிறப் புள்ளிகள் காணப்படும். பாதிக்கப்பட்ட மல்லிகை இலைகள் மற்றும் வெண்டை காய்களின் இலைகள் ஆகியவற்றை உற்று நோக்கினால் மெல்லிய நூலாம்படையும் அதனுள் சிவப்புநிற சிறிய பூச்சிகள் மெதுவாக நகர்வதையும் காணமுடியும்.

உருப்பெருக்கி கொண்டு பார்த்தால் அப்பூச்சிகள் எட்டுக்கால்கள் கொண்டனவாக இருப்பதைக் காண இயலும். இப்பூச்சிகள் செவ்வுண்ணி என்றும் அழைக்கப்படும். தாக்குதல் தீவிரப்பட்டால் இலைகள் முற்றிலும் வெளுத்து காய்ந்து கீழே உதிர்ந்துவிடும். வறண்ட வெப்பமான

சூழ்நிலையில் செஞ்சிலந்தி தாக்குதல் விரைந்து பரவும். நன்கு மழை பெய்தால் தாக்குதல் குறையும்.

**கட்டுப்படுத்த:**

மல்லிகை, வெண்டைப் பயிர்களில் செஞ்சிலந்திப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று கிராம் வீதம் நனையும் கந்தகம் மருந்தினைக் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் பதினைந்து நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். பயிரின் வளர்ச்சியினைப் பொருத்து ஏக்கருக்கு 200 முதல் 300 லிட்டர் வரை மருந்துக் கரைசல் தேவைப்படலாம். இலையின் அடிப்புறமும் படும்படி தெளிக்க வேண்டும்.

**குறிப்பு:**

மருந்துக் கரைசலைத் தெளிக்கும்போது பயிரில் நன்கு படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளில் ஒன்றினை (சாண்டோவிட், இன்ட்ரான் - வணிகப் பெயர்கள்) ஒரு லிட்டர் மருந்துக் கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்து கலக்கிக் கொள்ள வேண்டும்.

**எஸ்.ஜெயராஜன் நெல்சன்,**
**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**பருத்தி ஆராய்ச்சி நிலையம்**
**ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.**

## நிலக்கடலை, சூரியகாந்தி, பருத்தி, எள், கரும்பு பயிர்களுக்கான நீர் மேலாண்மை நவீன தொழில்நுட்பம்



**நிலக்கடலை:**

சுமார் 550 மி.மீ. நீர் தேவைப்படும். நிலம் நன்கு நனையும் படி நீர்கட்ட தகுந்த ஈரப்பதத்தில் உழவு செய்தபின் விதைப்பது நல்லது. நிலம் காய்ந்திருந்தால் உயிர்த்தண்ணீர் கட்டவேண்டும். பின் 12 நாட்கள் காயவிட்டு நீர் பாய்ச்ச வேண்டும். அதன்பின் 10-12 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது. எனினும் விழுது இறங்கும் பருவம், காய் பிடிக்கும் பருவம் முக்கிய

நீர்த்தேவை பருவங்களாகும். நுண்தெளிப்பு நீர்ப்பாசன முறையைக் கடைபிடிப்பதன் மூலம் 40 விழுக்காடு நீர் சேமிப்பு கிடைக்கும். வறட்சியால் வாடும் பயிர்களைக் காக்க 100 கிராம் பொட்டாஷ் உரத்தை 10 லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் வேண்டிய அளவு கலந்து கைத்தெளிப்பானால் பயிர் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். இதன்மூலம் 15-20 நாட்கள் வரை பயிரை வறட்சியிலிருந்து காக்க முடியும்.

**பருத்தி:**

650 மி.மீ. நீர் தேவைப்படும். நிலத்தின் தன்மைக் கேற்றவாறு 12-15 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் பருவம், காய் பிடிக்கும் பருவம், காய் வளர்ச்சிப் பருவம் ஆகியன முக்கிய நீர்த்தேவைப் பருவங்களாகும்.

**கரும்பு:**

கரும்பிற்கு மொத்தமாக 1800 மி.மீ. நீர் தேவைப்படுகிறது. வளர்ச்சிப் பருவத்திற்கு ஏற்றபடி பின்வரும் இடைவெளி நாட்களில் நீர் பாய்ச்சலாம். முளைப்புப்பருவம் ஐந்து நாட்கள், வளர்ச்சிப்பருவம் 7 முதல் 8 நாட்கள், முதிர்ச்சிப் பருவம் 10-11 நாட்கள், இடைவெளியில் நீர் பாய்ச்சுவதால் அதிக விளைச்சல் கிடைப்பதுடன் 30 சதவீதம் வரை நீர் சேமிக்க வாய்ப்பு உண்டு. குறைந்த அளவு நீர் கொண்டு அடிக்கடி நீர் பாய்ச்சுவதால் முளைப்புத்திறன் அதிகரிக்கும். ஆலைக்கழிவான "பிரஸ்மட்' அல்லது மக்கிய தென்னை நார்க்கழிவு எக்டருக்கு 15 டன்கள் இடுவதால் மண்ணின் நீர்பிடிப்பு தன்மை அதிகரித்து வறட்சி காலத்தில் பயிரைக் காக்கலாம். அகலப்பார் இடைவெளியில் சொட்டு நீர்ப்பாசன முறையில் பாசனம் செய்வதால் அதிக விளைச்சலுடன் நீர் சேமிப்பும் அடையலாம். இணைவரிசை நடவு செய்து தோகையைப் பரப்பி கணிசமான அளவு நீர் சேமிக்கலாம்.
கரும்பில் ஊடுபயிராக உளுந்து, சோயா மொச்சையைப் பயிரிட்டு அதிகப்படியான வருமானம் பெறுவதுடன் நீர் உபயோகிக்கும் திறனையும் அதிகரிக்கலாம். பின்பட்ட பருவத்தில் நடவு செய்த கரும்பு பெரும்பாலும் வறட்சியினால் பாதிக்கப்படுகிறது. இதன் பாதிப்பு தூர் பிடிக்கும் பருவத்தில் 11 விழுக்காடு என்றும், வளர்ச்சிப் பருவத்தில் 20 விழுக்காடு என்றும் கண்டறியப் பட்டுள்ளது. இந்த விளைச்சல் இழப்பைச் சரிகட்ட 1 சதம் பொட்டாஷ் கரைசலை 30, 60, 90வது நாட்களில் சரிபாதி யூரியாவுடன் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.
சொட்டுநீர் வடிவமைப்பு முறையில் 1.5 மீட்டர் இடைவெளியில் பக்கவாட்டு குழாய்கள் அமைத்தால் வடிவமைப்பினை மாற்றாமலேயே கரும்பு, வாழை, மஞ்சள், மரவள்ளி, தக்காளி பயிர்

செய்யலாம். நூறு சத பரிந்துரைக்கப்படும் தழை, சாம்பல் சத்து உரங்களை சொட்டுநீர் உரப்பாசனம் மூலம் மேற்கூறிய பயிர்களுக்கும் கையாளலாம். (தகவல்: முனைவர் மு.முகமது யாசின், வெ.கி.துரைசாமி, வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானி சாகர்-638 451. போன்: 04295 240 244)

**எள்:**

மிகக்குறைவான அளவு நீர் அதாவது 200-250 மி.மீ. தேவைப்படுகிறது. பூக்கும், காய் பிடிக்கும் பருவங்கள் முக்கியமான நீர் பாய்ச்ச வேண்டிய பருவங்களாகும்.

**சூரியகாந்தி:**

பயிரின் மொத்த நீர்த்தேவை 450 மி.மீ. ஆகும். சராசரியாக 10-12 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் பருவம், விதை பிடிக்கும் பருவம் ஆகியன முக்கிய நீர்த்தேவை பருவங்களாகும்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

09.01.2013 A.M

## மேட்டூர் அணை நீர்மட்டம் 35 அடி



மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 1,303 கன அடியாக இருந்த நீர் வரத்து, நேற்று காலை வினாடிக்கு 726 கன அடியாக குறைந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,501 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப் பட்டு வருகிறது. மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவை விட குடிநீர் தேவைக்காக திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 35.20 அடியாக இருந்த நீர் மட்டம், நேற்று காலை 35.04 அடியாக குறைந்தது. நீர் இருப்பு 9.67 டிஎம்சி

## பூச்சி மாத்திரை தின்று விவசாயி தற்கொலை



பல்லடம்: கடும் வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டதால் வேதனை அடைந்த விவசாயி பூச்சி மாத்திரை தின்று தற்கொலை செய்து கொண்டார்.திருப்பூர் மாவட்டம் பல்லடம் அடுத்த நாதேகவுண்டம்பாளையத்தை சேர்ந்தவர் சுப்பிரமணியம் (50). விவசாயி. மனைவி சுமதி (42), மகள் ரஞ்சிபிரியா (9), மகன் விஜயசாரதி (8) உள்ளனர். கழுகேரிபாளையம் அரசு நடுநிலைப்பள்ளியில் ரஞ்சிபிரியா 4ம் வகுப்பும், விஜயசாரதி 3ம் வகுப்பும் படிக்கின்றனர்.சுப்பிரமணியம் 4.5 ஏக்கர் நிலத்தில் மக்காச்சோளம் மற்றும் பீட்ரூட் உள்ளிட்ட காய்கறி பயிர்கள் பயிரிட்டு வந்தார். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்தால் கிணறும், நிலத் தடி நீரும் வறண்டது. தண்ணீருக்காக 5 இடங்களில் போர்வெல் போட்டுள்ளார். 800 அடி ஆழத் திலும் தண்ணீர் வரவில் லை. ஒரு போர்வெல் போட 80 ஆயிரம் வரை செலவு செய்துள்ளார்.

இதற்காக கடன் வாங்கியுள்ளார். கள்ளிப்பாளை யம் வங்கியில் பயிர்கடனும் பெற்றுள்ளார்.தண்ணீர் இல்லாததால் தற்போது நிலம் வறண்டுபோய் கிடக்கிறது. கடன் கொடுத்தவர்கள் பணத்தை கேட்டு நெருக்கடி கொடுத்தனர். இதனால் சுப்பிரமணியம் வேதனையில் இருந்தார். இந்நிலையில், கடனை திருப்பி செலுத்தும்படி இரு தினங்களுக்கு முன் வங்கியில் இருந்து நோட்டீசும் வந்தது. மனம் நொடிந்து போன சுப்பிரமணியம், நேற்றுமுன்தினம் இரவு தென்னை மர பூச்சிகளுக்கு வைக்கும் மாத்திரைகளை தின்றுவிட்டார். மயங்கி கிடந்த அவரை கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். நேற்று அதிகாலை இறந்தார்.பல்லடம் போலீசார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர். வறட்சி காரணமாக டெல்டா பகுதியில் விவசாயிகள் சிலர் தற்கொலை செய்துள்ள நிலையில், தற்போது திருப்பூர் மாவட்டத்திலும் நிகழ்ந்த தற்கொலை சம்பவம் பரபரப் பை ஏற்படுத்தி உள்ளது.

### சர்க்கரை கொள்முதல் விலை உயர்த்த மத்திய அரசு முடிவு



புதுடெல்லி : சர்க்கரை ஆலைகளில் இருந்து குறிப்பிட்ட அளவிலான சர்க்கரையை கொள்முதல் செய்யும் மத்திய அரசு, அவற்றை ரேஷன் விநியோகத்துக்கு அனுப்புகிறது. இதற்கு கடந்த 2011,12ல் ஒரு கிலோவுக்கு ரூ.19.04 விலையாக வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், நடப்பு ஆண்டில் சர்க்கரை கொள்முதல் விலையை ரூ.2 உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. தற்போது இத்திட்டம் நிதியமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது. ரேஷன் சர்க்கரை கொள்முதல் விலையை உயர்த்தினால், அரசுக்கு கூடுதலாக ரூ.400 முதல் ரூ.500 கோடி வரை மானியச் செலவு ஏற்படும்.

இன்றைய வேளாண் செய்திகள்

09.01.2013 A.M

## தென்மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும்: சென்னை வானிலை மையம் அறிவிப்பு

சென்னை,

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை இருப்பதால் தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் சில இடங்களில் ( புதன்கிழமை) மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை பொய்த்தது

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலம் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் முடிய ஆகும். இந்த பருவ காலத்தில் பெய்ய வேண்டிய மழை அளவு பெய்யவில்லை. அதாவது வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டது. தமிழ்நாட்டில் இந்த பருவத்திற்கு சராசரியாக 44 செ.மீ. மழை பெய்யவேண்டும். ஆனால் இந்த வருடம் துரதிருஷ்டவசமாக 37 செ.மீ.மழை தான் பெய்து வடகிழக்கு பருவமழை பொய்த்துள்ளது.

அதுவும் அணைகள், ஏரிகளுக்கு நீர் வரக்கூடிய பகுதிகளில் இந்த மழைகூட பெய்யவில்லை. அந்த பகுதிகளில் மிகக்குறைந்த அளவில்தான் பெய்துள்ளது.

இதனால் தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் விவசாயம் செய்ய முடியாமல் பெருத்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளது.

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை

இந்த நிலையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலைஉருவானது. அதன் காரணமாக இலங்கையில் தொடர்ந்து மழை பெய்துவருகிறது.

சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை சற்று தமிழகம்நோக்கி நகர்ந்துவந்திருந்தால் தமிழகத்திற்கு அதிக மழையை கொடுத்திருக்கும். ஆனால் அந்த தாழ்வு நிலை அங்கேயே உள்ளது. மேலும் குமரிக்கடல் மேல் வானத்தில் சுழற்சி உள்ளது.

மழைபெய்யும்

இத்தகைய காரணங்களால் தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் சில இடங்களில் இன்று (புதன்கிழமை) மழை பெய்யும். இன்று டெல்டா பகுதிகளிலும் மழையை எதிர்பார்க்கலாம். ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்பு உள்ளது. ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பெய்யக்கூடிய மழை குளிர்கால மழையாகும். எனவே இப்போதுபெய்யக்கூடிய மழை குளிர்கால மழையாகும். இன்று வடமாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8–30மணியுடன் முடிவடைந்த 24 மணிநேர மழை அளவு வருமாறு:–

தூத்துக்குடியில் மழை

ராமநாதபுரம் 4 செ.மீ., தூத்துக்குடி, பாம்பன், கமுதி, கடலாடி, கொளச்சல் தலா 2 செ.மீ., திருச்செந்தூர், ராமேஸ்வரம், விளாத்திக்குளம், பரமக்குடி, ஸ்ரீவைகுண்டம் தலா 1 செ.மீ. மழைபெய்துள்ளது.

## நடவு செய்யப்பட்ட நெல் பயிருக்கு குறைந்த தண்ணீரை பாய்ச்சி கூடுதல் மகசூல் பெறலாம் வேளாண்மை அதிகாரி விளக்கம்

கோபிசெட்டிபாளையம்

நடவு செய்யப்பட்ட நெல் பயிருக்கு குறைந்த தண்ணீரை பாய்ச்சி கூடுதல் மகசூல் பெறலாம் என்று வேளாண்மை அதிகாரி விளக்கம் அளித்து உள்ளார்.

தண்ணீர் பாய்ச்சும் முறை

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுதல், பயிருக்கு அதிக தண்ணீரை பாய்ச்சுதல் ஆகிய 2 விதங்களில் நெல் பயிர் பாதிக்கப்படுகிறது. நீர் நிர்வாகம் என்பது தண்ணீரை கட்டுப்படுத்தி, குறைந்த நீரில் அதிக மகசூல் எடுப்பதாகும். பயிருக்கு தேவையான தண்ணீரின் அளவு, அந்தப் பயிர் விளையும் மண்ணின் தன்மை ஆகியவை பயிர் வகை மற்றும் வானிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது.

கரிசல் மண்ணின் நீர்பிடிப்பு தன்மையினால் பயிர்களுக்கு நீண்ட நாட்களுக்கு தண்ணீர் கிடைக்கிறது. மணற்பாங்கான மண்ணில் தண்ணீர் தேவைப்படுகிறது. அதிக வெப்பம், காற்று அழுத்தம், காற்றின் வேகம் ஆகியவை பயிருக்குத் தேவையான தண்ணீரின் அளவை மாற்றுகின்றன.

தண்ணீர் தட்டுப்பாடு நேரங்களில்...

நெல் பயிருக்கு செலவாகும் தண்ணீரை, பூமிக்கு அடியில் செல்லும் தண்ணீர், சேற்று உழவிற்கு விடப்படும் தண்ணீர், பயிர் வளர்ச்சிப் பருவத்தில் கட்டும் தண்ணீர். இலைகள் மூலமாகவும், நிலப்பரப்பில் தண்ணீர் ஆவியாதல் மூலமாகவும் என 4 வகைகளாக பிரிக்கலாம். ஆகவே நெல்பயிரை சாகுபடி செய்து, அறுவடையாகும் வரை 1,240 மில்லி மீட்டர் தண்ணீர் செலவாகிறது.

அதில் நாற்றாங்கல் அமைப்பதற்கு 40 மில்லி மீட்டரும், நடவு வயல் தயாரிப்பதற்கு 200 மில்லி மீட்டரும், பயிர் வளர்வதற்கு ஆயிரம் மில்லி மீட்டரும் தண்ணீர் தேவைப்படுகிறது. நெல் தண்ணீரில் வளரும் தாவர இனப் பயிர் ஆகும். தண்ணீர் தட்டுபாடு நேரங்களில் நெல் பயிரின் சில வளர்ச்சி பருவங்களில் தண்ணீரை வடித்து விடலாம்.

மகசூல் அதிகரிப்பு

இதனால், மகசூல் குறைவது இல்லை. மாறாக அதிக மகசூல் கிடைக்கிறது. எனவே, நெல்லில் வளர்ச்சிப் பருவங்களை நாம் அறிந்து கொள்வது அவசியம். நெல் பயிரின் வளர்ச்சியை 3 பருவங்களாக பிரிக்கலாம். விதை முளைத்ததில் இருந்து பூக்கரு உருவாதல் வரை விதைப்பில் இருந்து சுமார் 50 நாட்கள் ஆகும்.

பூக்கரு உருவாதல் முதல் பூக்கும் பருவம் வரை சுமார் 80 நாட்கள் ஆகும். பூக்கும் பருவம் முதல் கதிர் முதிர்ச்சி அடையும் நிலை வரை 110 நாட்கள் ஆகும். வேர் பிடிக்கும் தருணத்திலும், பூக்கரு உருவாகும் சமயத்திலும், பூக்கும் தருணத்திலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் மகசூல் கணிசமாக பாதிக்கப்படும்.

தூர்கட்டும் பருவம்

இதுவல்லாத மற்ற பருவங்களில் தண்ணீர் பற்றாக்குறையாக இருந்தால் மகசூல் பாதிக்கப்படாது. மேலும், 40 முதல் 50 சதவீதம் வரை தண்ணீர் மீதம் ஆகும். பொதுவாக 2.5 செ.மீ தண்ணீர் கட்டி, அந்த தண்ணீர் மறைந்த பின்பு மீண்டும் அதே அளவு நீர் கட்டினால் போதுமானது. தூர்கட்டும் பருவத்திலும், பூக்கும் பருவத்திலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் மகசூல் குறையும்.

ஒரு வயலில் இருந்து மற்ற வயலுக்கு நீர் பாய்ச்சுவதை விட தனி வாய்க்கால்கள் மூலம் ஒவ்வொரு வயலுக்கும் நீர் பாய்ச்சினால் தண்ணீர் தேவை 12 சதம் வரை குறைகிறது. அதிக அளவு தண்ணீர் கட்டினால் களைகளை நன்றாக கட்டுப்படுத்த முடியும். ஆனால், தூர்களின் எண்ணிக்கை குறைந்து விடும்.

நீர் நிர்வாகம்

நெல் பருவத்தில் 105 நாள் வயதுள்ள பயிருக்கு பொதுவாக 900 மில்லி மீட்டர் தண்ணீரும், 135 நாள் வயது ரகத்துக்கு 1,100 மில்லி மீட்டர் தண்ணீரும் தேவைப்படுகிறது. எனவே, நடவின்போது குறைந்த அளவு தண்ணீர் வைக்க வேண்டும். பயிர்களை வயலில் நடவு செய்த 8–வது நாள் வரை 5 செ.மீ. தண்ணீரும், 45–வது நாள் வரை 2 முதல் 3 செ.மீ. தண்ணீரும் கட்ட வேண்டும்.

50 முதல் 55–வது நாளில் அதிகளவு தண்ணீர் இருந்தால், அதை வடிகட்ட வேண்டும். 55 முதல் 70–வது நாள் வரை 5 முதல் 7 செ.மீ தண்ணீரும், 70 முதல் 90–வது நாள் வரை 5 செ.மீ தண்ணீரும், கதிர்கள் முதிர்ச்சி அடையும்போது 3 செ.மீ. தண்ணீரும் கட்டலாம். அறுவடைக்கு 7 நாட்கள் முன்பு தண்ணீரை முழுமையாக வடித்து விட வேண்டும்.

அதிகம் பாய்ச்சுவதால்...

வயல்களில் தண்ணீரை அதிகம் கட்டுவதால் பயிர்களின் வளர்ச்சி அதிகமாகி பயிர் சாய்கிறது. தூர்கள் குறைகின்றது. வயலில் இடப்படும் உரங்கள் பயிருக்கு சரியான அளவு கிடைப்பதில்லை. மண்ணில் அமிலத் தன்மையை உண்டாக்குகிறது. வேர் வளர்ச்சி குன்றி அழுகல் உண்டாகிறது. பிராண வாயு குறைகிறது.

விஷ வாயுக்கள் பூமியில் இருந்து வெளி வருகின்றன. களைகளின் தன்மையும் எண்ணிக்கையும் தண்ணீருக்கு ஏற்றவாறு மாறுகிறது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தெரிவித்து உள்ளார்.